மணி வரையிலுமா என்று கேட்டுக்கொண்டு இருக்கலாம். பாராளுமன்றத்திலே எல்லாம் சில நேரத்தில் 2 மணி, 3 மணி வரையிலேயும் கூட நடக்கும். இயற்கையாகவே 10 மணி வரை நடப்பது என்பது, அங்கே நடக்கும். எனவே, (குறுக்கீடுகள்) இப்போதும்கூட உறுப்பினர்களுக்கு எல்லாம் மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் சூப் முதற்கொண்டு கொடுத்து இருக்கிறாரே ! எனவே, இதுபோன்று நடப்பதால், அதிகமான நேரம் பேரவையில் விவாதிப்பதற்குக் கிடைக்கிறது என்பதற்காகச் சொன்னேன். அதற்காக நாள்தோறும் 10 மணி வரை இருக்குமா என்று, நாளைக்கு 8 மணிக்கே புறப்பட்டு விடக் கூடாது. இப்படி இது ஒரு நாளில் நடக்கிறது; மற்ற நாட்களில் சாதாரணமாக அந்த குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்கப் பார்க்கலாம் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அளவு வரையிலேயும் இருந்த உறுப்பினர்களுக்கும், விரிவாகப் பதில் சொன்ன அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இவ்வளவு நேரம் வரையிலேயும் அவை நடவடிக்கைகளை சிறப்பாக இருந்து குறிப்பு எடுத்து, நாளையதினம் இந்தச் செய்திகள் அப்படியே வருவதற்குரிய ஒத்துழைப்பைக் கொடுத்திருக்கிற பத்திரிகை நண்பர்களுக்கும் என்னுடைய பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(30-4-1994)* காலை *11.30* மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை இரவு *10.23* மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

109. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் *1991-92*-ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. *(1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் *(மத்திய சட்டம் 1/1956) 619*-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) *(தமிழ், ஆங்கிலம்)*

110. திருவாளர்கள் ஏசியாட்டிக் ஆக்ஸிஜன் லிமிடெட் அவர்களால் *1993-94* முதல் *1995-96* வரையிலான *3* ஆண்டுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியைத் தள்ளி வைப்பது குறித்து *9-2-1992* ஆம் நாளிட்ட *40*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

1994 ஏப்ரல் 29]

(1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது).

111. சென்னை, திருவாளர்கள் கெமக் லேபாரட்டரீஸ் லிமிடெட், அவர்களால் 1992-93 முதல் 3 ஆண்டுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியைத் தள்ளிவைப்பது குறித்து 23-12-1993-ஆம் நாளிட்ட 415-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

146. மானியக் கோரிக்கை எண் 46-செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

147. மானியக் கோரிக்கை எண். 50 - சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

148. மானியக் கோரிக்கை எண். 21 மீனளத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

149. மீனளத்துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

150. மானியக் கோரிக்கை எண். 31 - பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

151. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர் நலம் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் துறை பற்றிய செயல்முறைத் திட்டம். (ஆங்கிலம்)

152. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்தாறாவது அறிக்கை, 1993-94.

153. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்தேழாவது அறிக்கை, 1993-94.

154. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்தெட்டாவது அறிக்கை, 1993-94.

155. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்தொன்பதாவது அறிக்கை, 1993-94.

156. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பதாவது அறிக்கை, 1993-94.